செ.வெ.எண் : 667/2016 நாள்: 22.09.2016

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் முதுகு தண்டுவடத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி வழங்கப்பட உள்ளது. மேற்குறிப்பிட்ட உதவி உபகரணத்தை பெறுவதற்கு முதுகு தண்டுவடத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் கீழ்க்கண்ட ஆவணங்களுடன்

1. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல்
2. குடும்ப ரேஷன் கார்டு நகல்
3. பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் - 1

10.6.2016க்குள் நாகர்கோவில் மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பிக்கும்படி ஏற்க்கனவே தெரிவிக்கப்பட்டது. அதன்படி நமது மாவட்டத்தில் உள்ள தகுதியான மாற்றுத்திறனாளிகள் நாளை (23.9.2016) மாலை 5.45 மணிக்குள் கீழ்கொண்ட முகவரியில் விண்ணப்பிக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா. சவான், இ.ஆ.ப. அவர்கள் மீண்டும் தெரிவித்துள்ளார்கள்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவவர்,
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில்.

தொலைபேசி எண் 04652-279411

மாவட்ட ஆட்சித் தலைருக்காக,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.